1978 மார்ச் 4]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த பாரதி கமிஷன் அறிக்கை அரசுக்கு எப்போது சமர்ப்பிக்கப்பட்டது என் பதையும், இங்கே உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கேட்ட கேள்விக்கு இணங்க அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பல தரப்புகளில் அதாவது போன் உபயோகிக்கப்பட்டது, கார் உபயோகிக்கப்பட்டது, மற்றும் வேண்டிய கட்சிக்காரர்களுக்கு வேலை கொடுத்தது போன்ற தலைப்புகளில் ஊழல், லஞ்சம், நடத்தியதை இந்தக் கமிஷன் அறிவித்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எந்தெந்த வகையான குற்றச்சாட்டுக்கள் மீது இதுவரையிலே எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ? அப்படி நட வடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், அதற்கான காரணங்கள் என்ன ? இப்போது பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள். பாரதி கமிஷன் விசாரணையிலே ஒன்றுமே இல்லை என்று சொல் கிறார்களே, இது உண்மையா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், நாட்டு மக்கள் யாரும் பாரதி கமிஷனிலே ஒன்றுமே இல்லை என்று பேசிக் கொண்டிருக்கவில்லை. இன்றைய தினம் நாட்டு மக்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்கும் தெரி யும். ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று நாட்டு மக்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒனறுமே இல்லை என்று சொல்வதற்கு இல்லை. பாரதி விசாரணைக் குழு அறிக்கையின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் பட வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதும் தவறு. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் பல நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்றவாறு, அவைகள் பரிசீலனை யிலும் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Action against journals

*Q. 387—Thiru S. GANESAN : Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state.—

(*a*) the details of the newspapers and periodicals against which action has been taken during 1976 in this state by the Government; and

(b) the reasons therefor ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) விரிவான விடை* ஒன்று அவையின்முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தற்போது தமிழகத்தில் ஓரிரு பத்திரிகைகளில் இன்றைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே குறிப்பிட்டது போல் சில தனிப்பட்ட தலைவர்களைப் பற்றியும் குடும்பங்களைப் பற்றியும் தரக்குறைவாக எழுதி வருகின்ற பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்களே சில நாட்களுக்கு முன்னால் அறிவித்திருக்கிறார்கள். அத்தகைய பத்திரிக்கைகள் மீது என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது 1976 ஆம் ஆண்டைப் பற்றிய கேள்வி. இன்றைக்குள்ள நிலையைப் பற்றித் தாங்கள் கேட்கிற கேள்விக்கு எப்படி விவரங்கள் இருக்க முடியும் ?

திரு. என். கிட்டப்பா : 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னால் முன்பு நான் கூறிய கேள்வியில் அடங்கிய நிலை பற்றி அறிவிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் இன்றைக்குப் பத்திரிகைகள் சில எழுதிக் கொண்டிருப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்தார்கள். அம்மாதிரி முதல்வர் அவர்களே அறிவித்துவிட்ட பிறகு அதிலே அவர்களுக்கு ஐயம் தேவையில்லை. தேவையானபோது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : 1976 ஆம் ஆண்டு தி. மு. க. ஆட்சி கலைக்கப்படாமல் இருந்த நேரத்தில் மக்கள் குரல், தென்னகம் போன்ற பத்திரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தனிக் கண்ணோட்டம் கொண்டவை என்று பேசப்படுகிறது. அது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை எப்படி அனுமதிக்க முடியும் ?

திரு, ஓ. சுப்பிரமணியம் : 1975 ஆம் ஆண்டு எந்தெந்த நாளிதழ்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டன ? அதற்கான காரணங்கள் என்ன ?

---

*726ம் பக்கத்தில் இணைப்பு I—ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1978 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ஆர். வீரப்பன் : 1976 ஆம் ஆண்டைப் பற்றிய கேள்விக்கு விவரமான விடை வைக்கப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டில் மொத்தம் 39 பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுத்து தடை செய்யப்பட்டிருக்கிறது. 1976 ஆம் ஆண்டில் 14 பத்திரிகைகளின்மீது நடவடிக்கை எடுத்து தடை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : மாநில தணிக்கை அதிகாரி தந்த அறிக்கையின்மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல் அந்த அதிகாரி இப்போதும் தகவல் தந்துக் கொண்டிருக்கிறாரா ? அது போன்று தற்போதும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது தணிக்கை அதிகாரி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவ்வாறு தடை செய்யப்பட்டதற்கான காரணங்கள்—கிரவுண்ட்ஸ் என்ன ? எந்த அடிப்படையில் தடை செய்யப்பட்டது ? அந்தத் தடைகள் பூராவும் நீக்கப்பட்டனவா ? இல்லை என்றால் எத்தனை நீக்கப்பட்டன ? பாக்கி எவ்வளவு இருக்கிறது ? நீக்கப்படாமல் இருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தடை செய்வதற்கு இரண்டு அடிப்படைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒன்று, மாநில அரசு தன் சொந்த விருப்பத்தில் தடை செய்திருக்கிறது. இன்னொன்று மாநிலத்திலுள்ள மத்திய சர்க்காருடைய தணிக்கை அதிகாரி தெரிவித்த கருத்தின்மீது தடை செய்யப்பட்டிருக்கிறது. மாநில அரசு தன்னுடைய சொந்தக் கருத்தில் தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் 1975-76 ஆம் ஆண்டில் 35. மத்திய சர்க்காருடைய அதிகாரி தெரிவித்த கருத்தின் மீது தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் 18. மொத்தம் தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் அல்லது நூல்கள் 53. அதிலே இந்த அரசு வந்ததற்குப் பிறகு 49 தடைகளை நீக்கிவிட்டிருக்கிறது. சில காரணங்களுக்குகாக ஐந்து தடைகள் இப்போது உள்ளன.

'முரசொலி' பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்ட அரசு விளம்பரங்கள்.

*வினா 388.—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975 ஆம் ஆண்டு 'முரசொலி' பத்திரிகைக்கு விளம்பரம் கொடுத்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?